# இரட்சிப்பு
## RATCHIPPU

RATCHIPPU = SALVATION


Volume-12 | April-2023 | Issue-11

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-


நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.
யோவான்-11:25


# கிறிஸ்து
# உயிர்த்தெழுந்தார்
# அல்லேலூயா

மெய்யாகவே
அவர்
உயிர்த்து
எழுந்தார்
அல்லேலூயா



## இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் எங்கள் அன்பின் 'ஈஸ்டர்' நல்வாழ்த்துக்கள். 'தபசுக் காலம்' மற்றும் அதன் முடிவுப்பகுதி யான 'பரிசுத்த வாரம்' ஆகியவற்றை ஆசரிக்கவும், ஈஸ்டர் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடவும் கிருபை

செய்த ஆண்டவருக்கு கோடாகோடியாய் துதி செலுத்துவோமாக. மட்டுமல்ல, இந்த ஆண்டு குருத்தோலை ஞாயிறு-பவனி, வியாகுல வியாழன்-திருவிருந்து, புனித வெள்ளி-மும்மணித் தியானம் ஆகியவற்றில் பங்குபெறும் கிருபையையும் தந்திருக்கிற கடவுளுக்கு மகிமையையும், கனத்தையம் நன்றிகளையும் செலுத்துவோம்.

நமது ஊழிய இயக்குநரின் இம்மாத ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். 'இரட்சிப்பு' பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (WEBSITE ADDRESS: www.ratchippu.in/ratchippu.in), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், NMS-MISSIONARY ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இம்மாதத்திற்கான 'ஜெப-ஜன்னல்' ஜெப-நேரங்ளில் (ஏப்ரல் 14, 21, 28) இணைந்து மன்றாட்டு ஜெபத்தில் ஈடுபடவும், 'அனைவரும்-ஊழியத்தில்' - எனப்படும் நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணைந்து செயல்படவும் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 7-ல்).

தேவசமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-148** **மத்தேயு 28:5,6**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| சிலுவைமரத்தில் அறையப்பட்ட இயேசுவைத் தேடிவந் தீர்களென்று அறிந்திருக்கிறேன். கர்த்தர் சொன்னபடியே எழுந்திருக்கிறார் ஆகையால், அவர் இங்கேயில்லை; அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். | சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்ன படியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர் கள் என எனக்குத் தெரியும். அவர் இங்கே இல்லை; அவர் கூறிய படியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். | சிலுவையில் கொல்லப்பட்ட இயேசுவை தேடுகிறீர்கள் என்பதை நானறிவேன். இயேசு இங்கே இல்லை. தாம் சொன்னது போலவே உயிர்த்தெழுந்துவிட்டார். அவரது சரீரம் வைக்கப்பட்ட இடத்தைப் பாருங்கள். |

ஈஸ்டர் திருநாள் சிறப்பு தேவசெய்தி...

# உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஊக்கம் தரும் வார்த்தைகள்

யோவானின் மகன் சீமோனே,

நீ இவர்களைவிட மிகுதியாக என் மீது அன்பு செலுத்துகிறாயா?''

யோவான் 21:15



அருட்திரு. மோகன்ராஜ்

**Rev. D. Mohanraj**

PRESBYTER IN CHARGE AND CHAIRMAN, CHURCH OF THE HOLY SPIRIT, SALIGRAMAM PASTORATE, (CSI MADRAS DIOCESE) SALIGRAMAM, CHENNAI-93, SOUTH INDIA

அன்பான இரட்சிப்பு இதழ் வாசகர்கள் அனைவருக்கும் உயிருடன் எழுந்த ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்!

யோவான் நற்செய்தியாளர் இயேசு உயிர்த்தெழுந்த நிகழ்வை சிறப்பாக எழுதுகிறார். இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒரு கனவு-மாயை என்று ஒரு தரப்பினர் கூறிவந்த நிலையில் யோவான் இதை ஒரு வரலாற்று உண்மையாக, இயேசு தம் சரீரத்தோடு உயிர்த்தெழுந்தார் என்ற உண்மையை தருகிறார். கலிலேயா கடலில் மீன் பிடிக்கும் தொழிலை அறிந்தவர்தான் இதை எழுதியிருக்க வேண்டும். மீன் பிடிப்பதற்கு சிறந்தது இரவு-நேரம்தான். எனவே சீமோன் பேதுரு பிற சீடர்களிடம் ''நான் மீன்பிடிக்கப் போகிறேன்'' என்றார். அதற்கு அவர்கள், ''நாங்களும் வருகிறோம்'' என்று படகில் ஏறினார்கள். அவர்கள் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. இயேசு பிள்ளைகளே! மீன் ஒன்றும் அகப்படவில்லையா? என்று கேட்டார், அவர்கள் இல்லை என்றார்கள்.

1. இயேசுவின் - ஊக்கமூட்டும் வார்த்தைகள்:

''படகின் வலப்பக்கம் வலை வீசுங்கள்'' (யோவா-21:6மு) என்ற இயேசுவின் வார்த்தை சீமோனுக்கு, ஆண்டவர் தன்னை அழைத்த போது நடந்ததை நினைவு படுத்தியது. அப்போதும், இரவு முழுவதும் முயன்றும் மீன்கள் அகப்படவில்லை. இயேசு, ''ஆழத்தில் போய் உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்'' (லூக்-5:4), அதன்படி போட்டு திரளான மீன்களைப் பிடித்தனர். ஆண்டவராகிய இயேசு சீமோனை பார்த்து, ''அஞ்சாதே, இதுமுதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்'' (லூக்-5:10பி) என்றார். அவ்வாறாக, இப்போதும், ''பிள்ளைகளே! மீன் ஒன்றும் அகப்படவில்லையா? படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள்'' (யோவா-21:5,6) என்றார். அப்படியே செய்து மிகுதியான மீன்களைப் பிடித்தனர். பேதுரு இவ்விரண்டு நிகழ்வுகளையும் நினைவில்கொண்டு தன் பின்மாற்றத்தை உணர்ந்தார். ''பிள்ளைகளே! உணவு அருந்த வாருங்கள்'' என்ற இயேசுவின் ஊக்கமூட்டும் வார்த்தைகள் அவருடைய தாய்-உள்ளத்தை வெளிப்படுத்தி, சீடர்கள் தங்கள் தவறை உணர்ந்து ஆக்கமும் ஊக்கமும் பெற்று மீண்டும் தங்களை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கத் தூண்டின.

2. இயேசுவின் - அன்பைத் தூண்டும் வார்த்தைகள்:

இயேசு சீமோன் பேதுருவிடம் கேட்ட, ‘‘யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களை விடவும் மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?’’ என்ற கேள்வி பேதுருவை கலங்கடித்தது என்றால் அது மிகையாகாது. இந்த கலக்கம், வேதனை, பேதுருவில் பெரிய மனமாற்றத்தை ஏற்படுத்தி இயேசுவின் அன்பிலிருந்து பிரிக்க முடியாத அளவுக்கு நெருக்கத்தை ஏற்படுத்தியது என்பது உண்மை. எனவேதான், பேதுரு, ‘‘ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டென உமக்குத் தெரியுமே’’ (யோவா-21:15,16) என்றார். இவ்வாறு, இயேசு மூன்று முறை பேதுருவிடம் கேட்டதால் அவர் மிகவும் உடைந்துபோய், மிகவும் துயருற்று, ‘‘எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?’’ (யோவா-21:17பி) என பதிலளிக்கிறார். இது, அவர் ஆண்டவர் மீது கொண்டிருந்த ஆழமான அன்பை வெளிப்படுத்தியது, அதேபோல், இயேசுவும், தாம் பேதுருவிடம் அதிக அன்பு பாராட்டுவதை உணர்த்தத் தவறவில்லை என்பதும் உண்மை. ‘இவர்களைவிட’ என்ற வார்த்தையை ‘இவைகளைவிட’ எனவும் புரிந்து கொள்ளலாம். அப்படியானால் இவர்களைவிட என்ற வார்த்தையை மற்ற சீடர்களைவிட, மற்ற எந்த உறவுகளையும்விட என்ற பரந்த நிலையில் புரிந்துக்கொள்ள வேண்டும். ‘இவைகளைவிட’ என்ற வார்த்தை, இந்த ‘153 பெரிய மீன்களை’-யும்விட, அதினால் கிடைக்கும் லாபத்தையும்விட, மீன் பிடிக்கும் தொழிலையும்விட, ஏன்? இந்த உலகத்தையும்விட அதிகமாக இயேசு தன்னிடம் அன்பு காட்டுகிறார் என்ற தூண்டுதலை பேதுருவுக்கு கொடுத்தது. இப்படிப்பட்ட உணர்த்துதலைப் பெற்று நம்மையும் ஆண்டவருக்கு ஒப்புக் கொடுப்போம்,

3. இயேசுவின் - பணி தொடர அன்பு கட்டளை:

இயேசு, ‘‘என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்’’ ‘‘என் ஆடுகளை மேய்’’ ‘‘என் ஆடுகளை பேணிவளர்’’ என்று கூறி, தம்மிடம் அன்பு காட்டும் பேதுருவுக்கு பணி பொறுப்பைத் தருகிறார். மனிதன் பொதுவாகவே தன் கடமைகளையும் பொறுப்பையும் மறந்து, சுய-உலக நாட்டம் உடையவனாக இருக்கிறான். இதற்கு பேதுருவும் விதிவிலக் கல்ல. எதிர்கால வாழ்வைக் குறித்த பயம் ஒருவேளை பேதுருவுக்கு மீண்டும் மீன் பிடிக்கும் எண்ணத்தை உருவாக்கியிருக்கலாம். தான் மட்டுமல்லாது பிற நண்பர்களையும் பின்மாற்றத்துக்கு தூண்டுபவனாக மாறினார். நம் நிலையை சற்று ஆராய்ந்து பார்ப்போம். நம் அழைப்பு, பொறுப்பு போன்றவற்றையும், நாம் எடுத்த தீர்மானங்களையும் தட்டிக் கழித்திருக்கிறோமா? கடவுளிடம் காட்டும் அன்பில் நாம் வளர்ந்திருக்கிறோமா? அல்லது குறைந்தி ருக்கிறோமா? நம் எதிர்காலம், பிள்ளைகள், குடும்பம் குறித்த பயம் நமக்கு உள்ளதா? இதனால் திருமறையை படித்து - தியானிக்க - ஜெபிக்க முடியவில்லையா? சற்றே நாம் சிந்திப்போம். இந்த ஆண்டின் உயிர்த்தெழுந்த திருநாள் கொண்டாட்டங்களில் நம்மையும் நம் உணர்வுகளையும் புதுப்பித்துக் கொண்டு, கிறிஸ்துவின் பாடு-மரணம் நம்மை மீட்கவே என்பதை உணர்ந்த வர்களாய் கடவுளின் அன்பு கட்டளையை ஏற்று அவர்-பணி செய்திட நம்மை கடவுளுக்கு அர்ப்பணிப்போம். அனைவருக்கும் உயிர்த்தெழுந்த திருநாள் வாழ்த்துகள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. டி. மோகன்ராஜ்

அருட்திரு. டி. மோகன்ராஜ், ஆயர்–தலைவர், சாலிகிராமம் குருசேகரம் (சிஎஸ்ஐ சென்னை பேராயம்),
தூய ஆவியானவர் ஆலயம், சாலிகிராமம், சென்னை–93, தென்னிந்தியா

ஈஸ்டர் திருநாள் சிறப்பு தேவசெய்தி...


அருட்திரு. தர்மராஜா

# வெற்றுக் கல்லறை விடும் வெற்றியின் செய்தி

அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து, இயேசுவின் சரீரத் தைக் காணாமல், அதைக்குறித்து மிகுந்த கலக்கம் அடைந்தி ருக்கையில், பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்களை நோக்கி: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோ ரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார், என்றனர். லூக்கா 24:3–6

**Rev.S.J.D. Dharmaraja**

PRESBYTER AND MISSION DIRECTOR, GOOD TIDINGS BIBLE PRINTS MINISTRIES
SALIGRAMAM, CHENNAI-93, SOUTH INDIA

இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துக்கள். இயேசுவின் உயிர்த்தெழுதலை ஒட்டி நடந்த சம்பவங்களைப் உற்று நோக்கும் போது, குழப்பத்தில் தொடங்குவதுபோல் தோன்றுகின்றன ஆனாலும் அவை நம்பிக்கையில் முடிந்தன. அதிகாலையில் இயேசுவை காணச்சென்ற பெண்கள் 'வெற்றுக்-கல்லறையைக் (வெறுமை யான கல்லறை) கண்டு குழப்பம் அடை கிறார்கள். பேதுருவும், யோவானும் கல்லறைக்கு ஓடினர். பேதுரு உள்ளே நுழைந்து வெற்றுக் கல்லறையைக் கண்டு, இயேசுவானவர் உயிர்தெழுந்ததை நம்பினார். பின்னர், யோவானும் கண்டு விசுவாசித்தார். இயேசு, சாவை, தன் சாவால் வீழ்த்திய உயிர்த்தெழுந்த திருநாளை வெற்றித் திருநாளாக (ஈஸ்டர் ஞாயிறு) கொண்டாடுகிற இவ்வேளையில் 'வெற்றுக் கல்லறை விடும் வெற்றியின் செய்தி' என்ற செம்பொருளின் கீழ் சற்று நேரம் தியானிப்போம்.

வெற்றுக் கல்லறை விளம்பும் நற்செய்தி:

அதிகாலை நேரம் இயேசுவின் சடலத்தைத் தேடிவந்த பெண்கள் கல்லறையை வெறுமை யாகக் கண்டனர். திருமறை சொல்லுகிறது: "அவர்கள் உள்ளே பிரவேசித்து, இயேசுவின் சரீரத்தைக் காணாமல்," என்று (லூக்-24:3). இவ்வாறு கலங்கித் தவித்த நேரத்தில் தேவதூதர்கள் அவர்கள்முன் தோன்றி, இயேசு இன்னும் மரணத்தில் இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். அவர் இங்கே இல்லை, கல்லறை காலியாக உள்ளது என்ற செய்தியைச் சொல்லுகின்றனர். இந்தச் செய்தியே, இயேசுவின் வெற்றுக் கல்லறை விளம்பும் நற்செய்தியாகும். அவர்கள்: "உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்." என்றனர் (லூக்-24:5,6). மட்டுமல்ல, "மூன்றாம்நாளில் தாம் எழுந்திருக்கவேண்டுமென இயேசு கலிலேயா விலிருந்த காலத்தில் சொன்னதை நினைவுகூருங்கள்." (லூக்-24:7) என்றும் கூறினர். இது விசுவாசிகளாகிய நாம் ஒவ்வொருவரும் நினைவுகூர்ந்து மகிழவேண்டிய நற்செய்தியாகும். இயேசு தம் சாவினாலே, சாவுக்குச் சாவுமணி அடித்தார் என்பது விடுதலை பெற ஏங்கித்தவிக்கும் ஒவ்வொருவருக்குமான நற்செய்தியாகும்.

வெற்றுக் கல்லறை விடும் அழைப்பு:

இயேசு உயிருடன் இருக்கிறார் என்ற செய்தி, அவரது உயிர்ப்பில் நாமும் பங்கு பெறுவோம்

என்னும் நம்பிக்கையைத் தருகிறது. இந்த நம்பிக்கை பிறருடனும் பகிரப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த 'வெற்றுக் கல்லறை' விடும் நற்செய்தியை பிறருடன் பகிர்ந்துகொள்ள இயேசுவானவர் அழைப்பு விடுப்பதையும், சீடர்கள் அதைப் பகிர்வதையும் நாம் வேதத்திலே வாசிக்கிறோம். இயேசு அவர்களை நோக்கி: ''பயப்படாதிருங்கள், நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்.'' (மத்-28:10)

மகதலா மரியாள், யோவன்னாள், யாக்கோபின் தாயாகிய மரியாள் உள்ளிட்ட ஸ்திரீகள் கல்லறையை விட்டுத் திரும்பிப்போய், இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை சீடருக்கும், மற்றவருக்கும் அறிவித்தார்கள் (லூக்-24: 9,10). கிறிஸ்து தரும் நிறைவாழ்வு நமக்கு நிச்சயம் உண்டு என்ற நற்செய்தியில் நம்பிக்கை கொண்டுள்ள நாமும் வெற்றுக் கல்லறை விடும் அழைப்பை ஏற்று நற்செய்தியை பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகிறோம்.

வெற்றுக் கல்லறை உணர்த்தும் பாடம்:

'வெறுமை' என்பது வெறுப்பில் தோன்றுவது அல்ல. அது, வாழ்வைக் கடந்து செல்லும் அனுபவம். இந்த உலகில் உள்ள அனைத்தும் கடந்து செல்லும் என்கின்ற நிலைப்பாடு, ''நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்த்தவர்களானால், இவ்வுலகில் உள்ளவைகளை அல்லாமல், விண்ணுலகம் சார்ந்தவற்றையே நாடுங்கள்'' (கொலோ- 3:1). உலக வீடாகிய கல்லறையை வெறுமையாக விட்டு, விண்ணுலகம் நாடிச் சென்ற இயேசுவை நோக்கிக்கொண்டு மேலான வற்றை நாடவேண்டும் என்பதே 'வெற்றுக்கல்லறை' கற்றுதரும் பாடமாகும். எனவே, உலக ஆறுதலைத் தேடாமல், கடவுளில் ஆறுதலைத் தேடுவோம்.

வெற்றுக் கல்லறை சொல்லும் சாட்சியின் வாழ்வு:

''உயிரைக் கொடுப்போம்'' என்று சொன்ன சீடர்கள் இயேசுவின் மரணத்தின்போது தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள ஓடி-ஒளிந்தனர். அச்சம் அவர்களை சூழ்ந்தது. ஆனால் 'வெற்றுக் கல்லறை' -அவர்களுக்கு நம்பிக்கையைத் தந்தது. வெற்றுக்கல்லறை-திருக்காட்சி மற்றும் இயேசுவின் தொடர் திருக்காட்சி அவர்களுடைய அச்சத்தை நீக்கி புதிய சக்தியை கொடுத்தது. அதுவே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு பலமான சாட்சியாக மாறியது.

''ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள். கடவுள் அவரை உயிரோடு எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகள்'' (அப்-3:15-16) என சாட்சி பகரும்படிக்கு இயேசுவின் சீடர்கள் துணிவு கொண்டார்கள். அச்சம் தவிர்த்து, ஆட்சியாளர்களின் மிரட்டல் களுக்கு அடிபணியாமல் இயேசுவுக்கு சான்று பகர்ந்தார்கள். அவ்வாறாகவே, நாமும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு நம் வாழ்வின் வழியாய் சாட்சி பகர்ந்து, அவருக்காக உயிருள்ள சாட்சிகளாக மாறுவோம்.

வெற்றுக் கல்லறை விடும் விடுதலையின் நற்செய்தியை அனைவருக்கும் பகிர்வோம். ''ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இது. இன்று அகம் களிப்போம், அகம் மகிழ்வோம்'' (சங்-118:24), மற்றும் ''கிறிஸ்துவின் சரீரத்தைப் புசித்து, அவரது இரத்தத்தில் பருகுவோருக்கு நிறை வாழ்வு உண்டு. அவர்கள் கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுவார்கள் (யோவா-6:54) ஆகிய திருமறை திருவசனங்களின்படி, விசுவாசத்தில் நாம் திருவிருந்தை உண்டு களித்து, நம் அகக்கண்க ளால் கிறிஸ்துவைக் கண்டுமகிழ்ந்து, உயிர்த்தெழுதலின் அனுபவத்துடன் ஈஸ்டர் பண்டிகையைக் ஆசரிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# BETHEL BIBLE COLLEGE

A Ministry of Gospel Mission of India (GMI)

(Affiliated to the Senate of Serampore College [University])

4th Lane, Seethamma Colony, Pattabhipuram Post, Guntur - 522006, Andhra Pradesh, India

Invites applications from committed and qualified men and women of any Christian denomination for the following degree courses in English under the Senate of Serampore College [University] system, commencing from June 2023

## 5 YEARS B.D.

Bachelor of Divinity

**Eligibility**

Intermediate pass

## 4 YEARS B.D.

Bachelor of Divinity

**Eligibility**

Graduation from any recognized University

D.C.S. (with Intermediate /+2 Pass) & 2 Qualifying papers pass

Mature Candidate with Mature Candidate Entrance Examination pass

## 2 YEARS B.D.

Bachelor of Divinity

**Eligibility**

B.Th. /B.Miss. / B.C.S. / Qualifying examination of the Senate of Serampore College [University]

Candidates willing to apply for any of the above BD degree courses can obtain application & prospectus from the Principal's office on payment of Rs 100/ (Rupees one hundred only) by MO/ DD/ Cheque. DD/ Cheque can be drawn in favor of "Bethel Bible College", payable at Guntur, Andhra Pradesh.

**The duly filled-in application form with required supportive documents should reach the Principal's office on/before 30, April, 2023**

Scan this QR code to download application

0863 226 2832 www.bethelbiblecollege.edu.in bbcguntur@yahoo.co.in https://www.facebook.com/bbcgunturap

வேத ஆராய்ச்சி - 71



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev. Dr. D. Suresh Rajan

BIBLE RESEARCH CORNER

**சங்கீதம் – 71**

**Episode - 71**

முன்னுரை:-

தாவீது தனது வயது முதிர்ந்த நாட்களில் இச்சங்கீதத்தை இயற்றியதாக பல வேத-பண்டிதர்கள் கருதுகின்றனர். நாம் அனைவரும் வயது மூப்படைவதும் பெலவீனப்படுவதும் வாழ்வில் தவிர்க்கமுடியாத நிகழ்வுகளாகும். தாவீது அரசர், தனது வயோதிப நாட்களை எவ்விதத்தில் செலவிட்டார் என்பதை அறிந்து கொள்வது நம் ஒவ்வொருவருக்கும் ஊக்கம் தருவதாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

1. ஆண்டவரை அறிந்திருந்த தாவீது:-

தாவீது தனது இறைவனை நன்கு அறிந்து வைத்திருந்தார். ‘‘தேவனே, என் சிறுவயது முதல் எனக்குப் போதித்து வந்தீர்’’ (வச-17) என்று கூறுவதன் மூலம் இதை நாம் அறிந்துகொள்கிறோம். தாவீது ஆண்டவருடைய தன்மைகளையும் அவருடைய செயல்பாடு களையும் நன்கு அறிந்து வைத்திருந்தார், ஆகவே, ஆண்டவர் மீது தன் முழு நம்பிக்கையையும் வைப்பதில் அவருக்கு எவ்வித தயக்கமும் இருக்கவில்லை. ‘‘கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாய் இருக்கிறீர். நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன். என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே.’’ (வச-5, 6) என மிகவும் அழகாக வருணிப்பதை இங்கு நாம் காண்கிறோம்.

அன்பானவர்களே, நாம் ஆண்டவரை நன்கு அறிந்து வைத்திருக்கிறோமா? என்பதுதான் நமக்கான இன்றைய கேள்வி. நாம் ஆண்டவரைப்பற்றி தெரிந்து வைத்திருக்கிறோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், தனிப்பட்ட முறையில் ஆண்டவரை நாம் அறிந்திருக்கிறோமா என்பதுதான் இன்று நாம் சிந்திக்க வேண்டிய விடயம் ஆகும்.

2. நற்குணங்களால் நிறைந்த தாவீது:

தாவீது அரசர் தன் வாழ்வில் பல நற்குணங்களை உடையவராய் வாழ்ந்து வந்தார். அவரது பழக்கவழக்கங்கள் அவரை இறைவனின் இதயத்திற்கு ஏற்ற மனிதனாக அடையாளம் காட்டின.எந்த ஒரு செயலையும் நாம் திருப்பத் திரும்பச் செய்யும்போது, அச்செயல் நமது பழக்கவழக்கமாக மாறிவிடுகிறது. தாவீது, தேவனை கனப்படுத்தி வாழ்ந்ததினால், தேவனைச் சார்ந்து வாழ்வதும், அவரைத் துதிப்பதும், தன் வேண்டுதல்களை தேவனுக்குத் தெரியப் படுத்துவதும், தாவீதின் வாழ்க்கையில் ஒரு அங்கமாகவே மாறிப்போய்விட்டது. தாவீதின் வாழ்வு இறைவனைப் புகழ்ந்து துதிக்கும் வாழ்வாக இருந்தது (வச- 5-8, 14-17, 22-24).

அன்பர்களே, நம்முடைய பழக்கவழக்கங்கள் எவ்வாறாக உள்ளன? குறை கூறுகிற வர்களாகவும், முறுமுறுக்கிறவர்களாகவும், கசப்பானவர்களாகவும் இருக்கிறோமா? அல்லது இறைவனைப் புகழ்வது நம் வாழ்வின் ஒரு அங்கமாக இருக்கிறதா? என்பதைச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்ப்போம்.

3. தேவனைச் சார்ந்திருந்த தாவீது:-

தாவீது, தனது சரீர ஆத்தும தேவைகளக்காக முற்றிலும் தேவனையே சாாந்தி ருந்தார். தனது வயதுசென்ற நாட்களிலும், இறைவன் தன்னைக் காப்பாற்ற வல்லவர் என்பதை அறிந்திருந்தார். ‘‘நானோ, எப்பொழுதும் நம்பிக்கை கொண்டி ருந்து, மென்மேலும் உம்மைத் துதிப்பேன்’’ (வச-14). நமது அனைத்து நேரங்களிலும் தேவன் மீது நம்பிக்கை கொண்டி ருப்பது என்பது ஒரு உன்னத அனுபவமாகும். பலவிதமான சந்தேகங்களும், சோர்வுகளும், மன-உளைச்சல் களும் நம்மைச் சூழ்ந்துகொள்ளும்பொழுது, தேவனைச் சார்ந்து அவர் மீது நம்பிக்கையாய் இருக்க முடியுமா? என்பது இன்று நாம் கவனமாக சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

முடிவுரை:-

எந்த வயதினராய் இருந்தாலும், நம் சிறு வயது முதற்கொண்டு, தேவன் ஒருவரே நம்மைக் காப்பாற்றவும் அரவணைக்கவும் ஆசீர்வதிக்கவும் வல்லவர். நமது முதிர்வயது மட்டும் நம்மைக் கண்மணிபோல் காப்பார். நமக்கு விரோதமாக எந்த மனிதனோ அல்லது பிசாசோ வந்தாலும் தேவன் நம்மை அதிசயமாய் வழிநடத்துவார் என்பதை தாவீதின் இச்சங்கீதம் வாயிலாக அறிந்துகொள்கிறோம்.

எனவே, அன்பானவர்களே, மகிழ்ச்சியோடு தேவனுடைய கரங்களில் நம்மை ஒப்புக்கொடுத்து பயமின்றி அவருடைய ஒத்தாசையுடன் நம் எதிகாலத்தைச் சந்திப்போம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-149 சரியான பதில் அளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அனிதா ஜாண் CBE
12) அனிதா மோகன்ராஜ் ERO
13) அரோமா சாத்ராக் TIN
14) ஆர்தர் மாசில்லாமணி CHE
15) அருள்செல்வி - தர்ஷினி VIR
16) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
17) பெல்சி தங்கராஜ் CHE
18) பெனிட்டா பிராங்க்ளின் CHE
19) பியூலா அலெக்ஸ் CHE
20) செலினா பென்சி வில்சன் DR, KUW
21) சந்திராபாய் மாசிலாமணி AVD
22) சந்திரலேகா KAL-AP
23) சந்திரா சாமுவேல் TIN
24) சார்லஸ் ஃபின்னி DR, CHE
25) சார்லட் டேவிட் CHE
26) சித்ரா பெஞ்சமின் TVL
27) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
28) கிறிஸ்துதாஸ் GOP
29) கிறிஸ்டி ஞானராஜ் CHE
30) கிறிஸ்டி ஜேம்ஸ் SIR
31) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
32) டெய்ஸி ஜெபதாஸ் TCY
33) டெய்ஸி சாம் TUT
34) டேனியல் தாமஸ் TIN
35) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
36) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
37) டெல்பி பாத்திமா CHE
38) தேவமணி ஆபிரகாம் TUT
39) தேவநேசம் ராஜாசிங் CHE
40) டோராபாய் CHE
41) எலிசபெத் செல்லத்துரை CHE
42) எமிமாள் JOL
43) எஸ்தர் D.R. TIN
44) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
45) குளோரி ரவீந்திரன் TIN
46) ஞானம் ஜெபராஜ் TIN
47) ஞானம் பிலிப் CHE
48) ஞானராணி PAN TVL
49) ஞானசெல்வி மோசஸ் CHE
50) கோல்டா ஜேசுபாதம் MUM
51) கிரேஸ் டேனி TEN
52) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
53) கிரேனா அன்புரோஸ் CHE
54) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
55) கிரேஸியா ஜெயபால் CHE
56) கிரிசெல்டா செய்லர் CHE
57) ஹெலன் ஜான்சிராணி TIN
58) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
59) ஹெலன் திலக் TUT
60) ஹேமா அஜீத் CHE
61) ஹேமா கேப்ரியேல் BAN
62) ஹெப்சி அசரியா PON
63) ஹெப்சிபா மங்களராஜ் TIN
64) ஹிம்லா ராஜகுமாரி CHE
65) இளவரசி ஜோபிதா CBE
66) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
67) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
68) ஜமீலா செல்வராஜ் CHE
69) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
70) ஜேன் தர்மராஜ் TIN
71) ஜான்ஸி சந்தியா MKM
72) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
73) ஜெபா ஜெயராஜ் AVD
74) ஜெபக்குட்டி மோசஸ் TIN
75) ஜெபசீலி கிளின்டன CHE
76) ஜெபா சீனி MKM
77) ஜெமீலா நிக்ஸன் CHE
78) ஜெனித்தா செல்வின் TIN
79) ஜெனிட்டா ஹெலன் CBE
80) ஜென்சி ஞானேஷ் MUM
81) ஜெரின் ஸ்டீபன் CHE
82) ஜெஸி செல்லதுரை CBE
83) ஜெஸி ஜெயக்குமார் TIN
84) ஜெயா ஆல்பர்ட் KUM
85) ஜோனா ஸ்டீபன் AVD
86) ஜோஸ்பின் ஜெஸி CHE
87) ஜாய்ஸ் பாண்டியன் CHE
88) ஜூலியட் CHE
89) ஜூலியட் ஜெயக்குமார் TIN
90) கலா கிருபாகரன் TIN

வேதாகம போட்டி-149 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

91) கலையரசி செல்வராஜ் CHE
92) கஸ்தூரி எலியாஸ் TIN
93) கிங்ஸ்லி ரவிக்குமார் CHE
94) கிங்ஸ்லி தங்கமணி CHE
95) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
96) லதா மைக்கேல்ராஜ் CHE
97) லீலா டேவிட் CHE
98) லீலா ஜோஸப் CBE
99) லில்லி ஜாண்ஸன் CHE
100) லிஸி டென்சிங் TIN
101) மேபல் கிறிஸ்டியான் CHE
102) மல்லிகா V. CHE
103) மணிமேகலை ஜெயக்குமார் TIN
104) மனோகரம் தனராஜ் NAZ
105) மரிய பாப்பா CHE
106) மெஜிலா ஜோஷ்வா TUT
107) மெர்சிபா CBE
108) மெர்சி தனராஜ் CBE
109) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
110) மெரிட்டா ஜெயபாலன் TCY
111) மியூரியல் புஷ்பராஜ் CHE
112) நிக்ஸன் எவர்பிரைட் TIN
113) ஆலிவ் ஜெயபாலன் CBE
114) பாக்யபாய் ஆரோன் TIN
115) பமீலா எட்வின் KAN
116) பெர்சி பால் பொன்சிங் SAW
117) பிங்க்லின் தேவமலர் CHE
118) பொன்மணி உத்தமசிங் NAZ
119) பிரேமா பூபாலன் AVD
120) பிரேமா ஜானி PCM
121) பிரேமா ஸ்டாலின் CHE
122) பிரின்ஸ் தயாநிதி CHE
123) பிரிசில்லா தாஸ் CHE
124) பிரிஸ்கில்லாள் சசி CBE
125) பிரியா ராஜ்குமார் CHE
126) ரேச்சல் கனகராஜ் CBE
127) ராஜ்மேரி சார்லஸ் KER
128) ரமோலா அதிசயராஜ் TIN
129) ராணி பிரபாகரன் TIN
130) ராணி சாமுவேல்ராஜ் CHE
131) ரத்னா டென்னிஸன் CBE
132) ரத்னாவதி பாண்டியன் CHE
133) ரெஜினா விக்டர் TIN
134) ரோஸ்லின் மார்கிரெட் CHE
135) ரோஸி ஸ்டீபன் CHE
136) ரூபவதி நோபிள் TIN
137) ரூபி ஜாண்ஸன் TIN
138) ரூத் ஜாண்ஸன் TIN
139) சலோமி மனோகர் DR. CHE
140) சம்பு ஜெயசந்திரன் MDU
141) சாரா பாலசிங் MDU
142) சரோஜினி எலிசபெத் CHE
143) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
144) செல்வராஜ் K CBE
145) செல்வராணி ஆல்பர்ட் CHE
146) செல்வராணி G CHE
147) செல்வி அமிர்தராஜ் TVR
148) ஷாலி எடிசன் CHE
149) சாந்தி ஆசேர் TIN
150) சாந்தி ஆல்பர்ட் PCT
151) சாந்தி ஜெயசீலன் CHE
152) சாந்தி ரோஸ் CBE
153) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
154) ஷெரீன் ஜெபராஜ் PAN
155) சவுந்தரம் சாலமோன் CHE
156) ஸ்டெல்லா கனகராஜ் CHE
157) ஸ்டெல்லா சூசையா TUT
158) சுகிர்தா ஆல்வின் CHE
159) சுகிர்தா சின்னதுரை TIN
160) சுஜாதா சாமுவேல் CHE
161) சுமித்ரா B. CHE
162) சுசீலா தியோடர் TCY
163) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
164) தனசீலி ஞானராஜ் CHE
165) தெல்மா ஸ்டேன்லி MDU
166) உமா குளோரி CHE
167) வனஜா ஹெர்பர்ட் TIN
168) வசந்தா அன்பன் TIN
169) வசந்தா சந்திரசேகர் CBE
170) வசந்தி கருணாகரன் CHE
171) வசந்தி வாசன் CHE
172) விஜயராணி A. CHE
173) விஜி டேனியல் CHE
174) விமலா ஜெயக்குமார் TUT
175) விமலா P. CBE
176) விண்ணரசி ரோஸ் CHE
177) வினோலியா ஜேம்ஸ் KOV
178) வினோலியா வில்சன் VAN
179) வைலட் கிறிஸ்டோபர் TIN
180) வைலட் சைரஸ் CHE
181) வெஸ்லி சாமுவேல் TUT

# PRAYER-WINDOW PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் ஏப்ரல் – 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 14–04–2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 21–04–2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 28–04–2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

# பரிசுத்த வாரம் – 2023 — HOLY WEEK

## From 2nd April 2023 to 9th April 2023 – ஏப்ரல், 2 2023 முதல் ஏப்ரல், 9 2023 வரை

பரிசுத்த வாரம் (புனித வாரம்) என்பது ஈஸ்டருக்கு முந்தைய வாரமாகும், இது பெரிய வாரம் என்றும் அழைக் கப்படுகிறது. பல காலமான இது பாடுபட்ட வாரம் (Passion week) என்று அழைக்கப்பட்டது. இன்னும் சொல்லப் போனால், கிழக்கத்திய கிறிஸ்தவர்கள் இதை ‘‘இரட்சிப்பின் வாரம்’’ என்று அழைக்கிறார்கள். புனித வாரம், முதல்-முதல் பதிவு செய்யப்பட்டுள்ள இடம் புனித அத்தனாசியஸ் என்பவரின் கடிதங்கள் ஆகும். புனித வாரத்தின் அசல் கருவானது பாஸ்கா பண்டிகையின் வருடாந்திர கொண்டாட்டமாகும், இது அந்நாட்களில் (3ம் நூற்றாண்டு) மூன்று நாட்கள் (திரிடும் நினைவேந்தல்), அதாவது, பெரிய வெள்ளி தொடங்கி ஈஸ்டர் ஞாயிறு முடிவடைந்தது. புனித வியாழன் 4ம் நூற்றாண்டில்தான் சேர்க்கப்பட்டது. 5ம் நூற்றாண்டில்தான் பரி.வாரம் முழுமையாக்கப்பட்டது. ஆதிக் கிறிஸ்தவத்தின் பல புனித-வார ஆசரிப்புகள் ஜெருசலேமில் தோன்றி மேற்கு நாடுகளில் பரவியவை ஆகும்.
புனித வாரம் என்பது குருத்தோலை ஞாயிறு முதல் ஈஸ்டர் ஞாயிறு வரையிலான ஈஸ்டர் வாரம் ஆகும்.

குருத்தோலை ஞாயிறு: ஏப்ரல்-2, 2023 அன்று எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிகரமான பவனி கொண்டாட்டம்.

வியாகுல வியாழன்: ஏப்ரல்-6, 2023 அன்று இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களின் கால்-கழுவுதல், கடைசி ராபோஜன உணவு மற்றும் இயேசுவின் கெத்செமனே-வியாகுல ஜெபத்தை நினைவுகூர்தல்.

புனித வெள்ளி: ஏப்ரல்-7, 2023 அன்று கல்வாரியில் இயேசு சிலுவையில் அறையப்பட்டு அவர் இறந்ததை நினைவு கூர்தல். 7-சிலுவைத் திருவசனங்கள் - மும்மணித் தியானம்.

புனித சனி: ஏப்ரல்-8, 2023 யோசேப்பும் நிக்கொதேமுவும் கல்லறையில் இயேசுவின் உடலை அடக்கம் செய்தல்.

ஈஸ்டர் ஞாயிறு: ஏப்ரல் 9, 2023 இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல். பாவம் மற்றும் மரணத்தின் மீதான இயேசுவின் வெற்றியை கொண்டாடுதல்.

வேதபகுதி
புலம்பல்
முழுவதும்

# வேதாகம போட்டி-150

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

பதிலளிக்க
கடைசி நாள்
ஏப்ரல்-25

1. நாம் எவற்றை சோதித்து ஆராய்ந்து கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்?
2. சகல வீதிகளின் முனையிலும் கொட்டுண்டுபோனவை எவை?
3. உபத்திரப்படவும், அடிமைவேலை செய்யவும் சிறைப்பட்டுப்போனவர்கள் யார்?
4. யாருடைய காயம் சமுத்திரத்தைப்போல் பெரிதாயிருக்கிறது?
5. ஊத்ஸ் தேசவாசியானவள் யாருடைய குமாரத்தி?
6. ஜெபம் உட்பிரவேசிக்கக்கூடாதபடிக்கு கர்த்தர் தம்மை என்ன செய்தார்?
7. யாருடைய நாவு தாகத்தால் மேல்வாயோடே ஒட்டிக்கொண்டிருக்கிறது?
8. மேய்ச்சலைக் காணாத மான்களுக்கு ஒப்பானவர்கள் யார்?
9. 'இரக்கமுள்ள ஸ்திரீகளின் கைகள் தங்கள் பிள்ளைகளை அடித்தன' - சரியா தவறா?
10. 'ஆண்டவர் பகைஞன் போலானார், இஸ்ரவேலை விழுங்கினார்' - சரியா தவறா?
11. 'தன் இளம்பிராயத்தில் நுகத்தை சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது' - சரியா தவறா?
12. 'நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே' - சரியா தவறா?
13. 'இதை' ஆலையில் மிதிக்கிறதுபோல் ஆண்டவர் யூதா குமாரத்தியை மிதித்தார்.

அ) திராட்சப்பழத்தை ஆ) களிமண்ணை இ) ஒலிவ-விதையை ஈ) பாதரட்சையை

14. கர்த்தருடைய இரட்சிப்புக்கு 'இவ்வாறு' காத்திருக்கிறது நல்லது:

அ) பொறுமையோடு ஆ) விழிப்போடு இ) நம்பிக்கையோடு ஈ) மகிழ்ச்சியோடு

15. ஆண்டவர் தமது கோபத்தில் சீயோன் குமாரத்தியை 'இதினால்' மூடினார்:

அ) மேகத்தால் ஆ) போர்வையால் இ) மந்தாரத்தினால் ஈ) நிந்தையால்

16. 'இதற்கு' வருவார் இல்லாததால் சீயோனுக்கு போகிற வழிகள் புலம்புகிறது:

அ) பண்டிகைக்கு ஆ) ஓய்வுநாளுக்கு இ) தேவாலயத்துக்கு ஈ) எருசலேமுக்கு

17. குவளையில் குடித்து-வெறிப்பாள் இந்த குமாரத்தி! மானம்-கெட்டு மகிழ்வாள் இந்த மகராசி! பாவம் வெளிப்பட்டு, பாழ்படுவாள் இந்த குமாரத்தி! யார் இவள்?
18. கரங்களை விரித்து கதறி-கதறி அழுகிறாள்! தேற்றுவார் இல்லாமல் தேம்பி-தேம்பி அழுகிறாள்! பரமன் வீட்டு தலைநகரி பரஸ்திரீ போல் ஆயினாள்! யார் இவள்?
19. பால்வடியும் முகங்கள் கன்னங்கரேலென்று ஆனது! பவளக்கொடி-மேனி பட்ட-மரம்போல் ஆனது! எழிலரசர் இவர்கள் உடல் எலும்பும்-தோலும் ஆயிற்று! யார் இவர்கள்?
20. பாடல்-இசை சூழ்ந்த மலை, பாழாய்ப்போன பரமன்-மலை! சீர்-இழந்த சின்னமலை, சிறுநரிகள் திரியும் மலை! இது என்ன மலை?

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/siddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

A FOUNTAIN OPENED MAKOVR NIFTACH

## திறக்கப்பட்ட ஒரு ஊற்று

EPISODE - 47 மாக்கோவ்ர் நிப்டேக் பாகம் - 47

பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும். சக–13:1

There shall be a fountain opened to the house of David and to the inhabitants of Jerusalem for removing sin and uncleanness. Zec-13:1

பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவரும் பாவங்களுக்கு விலகினவரும் வானங்களுக்கு மேலாக உயர்ந்தவருமாயிருக்கிற யூத ராஜசிங்கத்தின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளக்கு ஈஸ்டர் வாழ்த்துக்கள்.

எபி-12:24 நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கு வந்து சேர்ந்தீர்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நமக்காக 2000 வருடங்களுக்கு முன் ‘திறக்கப்பட்ட ஊற்று’ உருவானது. இந்த ஊற்றண்டையில் துர்மனசாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீர முள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம் (எபி-10:22). அப்போது உங்களை கர்த்தர் ஒவ்வொருநாளும் நடத்தி நீரூற்றுகளிடத்திற்குக் கொண்டுபோய் விடுவார். கீர்த்தி பொறுந்திய நாற்றை எழும்பப்பண்ணுவார் (ஏசா-49:10).

உபா-33:28 யாக்கோபின் தலைமுறைகளான உங்கள் ஊற்று தானியமும் திராட்சரசமுமுள்ள தேசத்திலிருக்கும். அவருடைய வானமும் பனியைப் பெய்யும். இதுவரை நாம் தோண்டிய துரவுகளில் தோல்வியும் அவமானமும் நிந்தையும் இருந்தன. இனி ரெகொபோத் நீரூற்று தருவதால் வாக்குவாதம் பண்ணுகிறவர் களை தேடினாலும் காண்பதில்லை (ஆதி-18:22).

ஆதி-21:19 நமது ஆவிக்குறிய கண்களைத் திறந்து புதுபெலன், வல்லமை, வரங்கள், மகிமை என்ற நீரூற்றால் நம்மை அபிஷேகித்து நாம் போகவேண்டிய வழியைத் திறக்கிறார். இந்த ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்க, அவருடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறது (எபி-10:20). அல்லேலூயா.

ஜெபம்: அன்பே உருவான பரமபிதாவே உமக்கு ஸ்தோத்திரம். மெய்யாகவே இவர் தேவமனிதன் என்று குத்தின போர்ச்சேவகன் வாயினால் சாட்சியிடச்செய்து, முழங்கால்படியிடச்செய்த இயேசு தெய்வமே, ஸ்தோத்திரம். உம் விலாவில் ஈட்டி-பாய்ந்தபோது ஓடிவந்த இரத்தமும் தண்ணீரும் எங்களை 12நீரூற்றுக்கள், 70பேரீச்சை உள்ள ஏலீமின் தண்ணீர் அருகே கொண்டுவருவதாக. இயேசுவின் நாமத்தில், ஆமென் பிதாவே.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தேன்துளி வேதவசனக் கதை–143*. . .

# ஆத்திரத்தினால் ஏற்பட்ட விளைவு

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.



சகோ. அசரியா

பஞ்சாப் மாநிலத்தில் ஐடா என்ற ஒரு பணக்கார எஜமானி தன் கணவரின் மறைவிற்குப் பின் அவர் நிறுவிய தொழிற்சாலையை நிர்வகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தொழிற் சாலை லாபகரமாக இயங்குவதற்கு தனது தொழிலாளிகளை அதிகாலை முதலே பணிசெய்ய வைக்க வேண்டுமென விரும்பினாள். ஆகவே அதிகப் பணிப் பெண்களை நியமித்து, அவர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து, அதிகாலை 5மணிக்கு பணிப்பெண்களை எழுப்பிவிட்டு காலைக் கடன்களை முடித்து, சரியாக 6மணிக்கு பணிகளை ஆரம்பிக்க வேண்டிய ஏற்பாடுகளை செய்து கொடுத்தாள். ஐடா, வீட்டிலே ஒரு சேவலை வளர்த்தாள். அந்த சேவல் காலை 5மணிக்கு சரியாக கூவி விடும். சேவல் கூவுவதை வைத்து எல்லாப் பணிப்பெண்களையும் எழுப்பி விடுவாள்.

இந்நிலையில், சேவல் ஐந்து மணிக்கே கூவுகிறபடியினால்தான் எஜமாட்டி நம்மை அதிகாலையிலேயே எழுப்பி விடுகிறாள் என்பதை அறிந்த பணிப்பெண்கள் ஆத்திரத்தில் சேவலைக் கொன்று விட்டார்கள். இதை அறிந்த எஜமாட்டி மிகவும் கவலை அடைந்தாள். ஐடா, வயது முதிர்ந்தவளானபடியினால் நள்ளிரவிலும், முன்-காலை நேரங்களிலும் அவளுக்கு சரியாக தூக்கம் வருவதில்லை. ஆகவே ஐடா, நேரம் சரியாகத் தெரியாமல் காலை 3மணிக்கே எழும்பி, அந்நேரமே பணிப்பெண்களை எழுப்பிவிட்டு காலை 6மணிக்கு ஆரம்பிக்கும் பணிக்கென தயாராகச் சொல்லுவாள். முன்பு சேவல் கூவும்போது காலை 5மணிக்கு எழும்பி 6மணிக்கு தொழிற்சாலைக்குச் செல்லும் பணிப்பெண்கள் இப்பொழுது அதிகாலை 3மணிக்கு எழும்புவது மிகவும் கடினமாக இருந்தது. அவர்கள், தங்கள் முன்-நிலைமையை விட பின்-நிலைமை மிகவும் பரிதபிக்கக் கூடியதாய் மாறிவிட்டதை எண்ணி மன வருத்தத்துடன் தங்கள் பணிகளைச் செய்தார்கள்.

நாமும்கூட, காரியங்களை ஆத்திர அவசரத்தில் நடப்பிக்கிறோம். தேவ-சித்தம் அறிந்து அவருடைய வேளைக்குக் காத்திராமல் நம் இல்லத்-திருமணம், வீடு-கட்டுதல் போன்ற காரியங்களை அவசரமாக செய்து விடுகிறோம். அது அநேக நேரங்களில் நம்முடைய வாழ்க்கையை பாதித்து விடுகிறது. நமது தொழில் மற்றும் பிள்ளைகளின் படிப்பு போன்ற வற்றில் தேவ-சித்தத்தை அறியாமல் அவசரமாக நாம் எடுக்கும் முடிவுகள் நம் குடும்ப முன்னேற்றத்தைக் பாதிப்பதாக அமைந்துவிடுகிறது. ஆகவே கர்த்தரின் பாதம் அமர்ந்து, அவர் சித்தப்படி காரியங்களை நடப்பித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தரை நோக்கி அமர்ந்து அவருக்கு காத்திரு. சங்–37:7

கர்த்தருக்குக் காத்திருந்து அவருடைய வழியைக் கைக்கொள். சங்–37:34

தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். சங்–147:11

EPISODE 9

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-2 பகுதி-3

2... இந்திய இடைக்காலத்தில் கிறிஸ்தவர்கள்

4... ஒரு பொது-மனித சாட்சி

இந்திய இடைக்காலக் கிறிஸ்தவர்கள் பற்றிய

போதிய ஆதாரங்கள் இல்லாத நிலையில் சீனாவில் நீண்ட காலத்தைக் கழித்து, இந்தியா வழியாக ஐரோப்பா திரும்பிய மார்கோ போலோவை பொது-மனித சாட்சியாக எடுத்துக் கொள்ளலாம். அவர் 1292 மற்றும் 1295க்கு இடையிலான காலகட்டத்தில் விரிவாகப் பயணம் செய்தார். ஒரு சிறந்த பார்வை யாளராக இருந்தாலும், போலோ தனது பதிவுகளை முறையாக செய்யவில்லை. இந்தியாவில் சந்தித்த கிறிஸ்தவர்களைப் பற்றி நாம் எதிர்பார்த்ததைவிட அவர் சொல்வது குறைவாகவே உள்ளது.

மார்கோ போலோ இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு இடையே உள்ள தூரம் 22மைல்களுக்கு மேல் இல்லை என குறிப்பிடுகிறார். 'மாபார்' (பாலம்) தொடங்கும் இடம் 'கேப்-கொமோரின்' (கன்னியாகுமரி) எனவும், வேம்பாருக்கும் தூத்துக் குடிக்கும் இடைப்பட்ட கடற்கரையில் 'இன்றுவரை' மேற்கொள்ளப்படும் முத்து மீன் வளர்ப்பு (முத்துக்குளித்தல்) பற்றி துல்லியமாக விவரிக்கிறார்.

போலோவின் புத்தகத்தின் 18வது அத்தியாயத்தில் தோமா அப்போஸ்தலனின் (St. Thomas the Apostle) உடல் இருக்கும் இடம் மற்றும் அதன் அற்புதங்கள் பற்றிய சொற்பொழிவு" என்ற தலைப்பில், ''மாபார் மாகாணத்தில் பெரிய மக்கள்தொகை இல்லாத ஒரு நகரத்தில் தாமஸின் உடல் உள்ளது. இது ஒருசில வணிகர்கள் மட்டுமே செல்லும் சிறிய இடம். அது எளிதில் அணுக முடியாத இடம். அங்கு கிடைப்பது மிகக் குறைவான வணிகப் பொருட்களே." என்றும் விவரிக்கிறார்.

இருப்பினும், கிறிஸ்தவர்கள் மற்றும் சரசன்ஸ் அடிக்கடி புனித யாத்திரை வருகிறார்கள் என்று

போலோவின் குறிப்பில் உள்ளது

போலோவின் குறிப்புகளிலுள்ள குறைபாடுகள் குறிப்பிடத்தக்கவை. அப்போஸ்தலர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தின் பெயரை அவர் நமக்குத் தரவில்லை. அது மாபார் மாகாணம் என்பதைத் தவிர வேறு எந்தக் குறிப்பும் இல்லை. மேலும், போலோ திரும்பிச் சென்ற பாதை பற்றிய குறிப்பும் இல்லை. அங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்கள் மற்றும் அவர்களின் எண்ணிக்கை குறித்து எந்த செய்தியும் இல்லை. புனித யாத்திரைக்கு வந்த கிறிஸ்தவர்கள் யார், யார்? எங்கிருந்து வந்தார்கள்? போன்ற எந்த குறிப்பும் இல்லை. முஸ்லிம்கள் ஏன் அந்த இடத்திற்கு புனித யாத்திரை வந்தனர் என்பது குறித்தும் எந்த தகவலும் இல்லை.

பரி. தோமாவின் கல்லறைக்கு போலோ எப்போதாவது சென்றாரா? என்ற செய்தியும் இல்லாததால் அவரது குறிப்புகளுக்கு நம்பகத்தன்மையை வழங்க முடியுமா? என்று சில விமர்சகர்கள் சந்தேகிக்கின்றனர். ஆனால், பிற்காலத்தில் இந்தக் கடற்கரைப் பகுதி மெட்ராஸின் புகழ் பெற்ற இடமாகவும், பரபரப்பான வர்த்தக மையமாகவும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையில், ஆங்கிலேயர்கள் மதராஸ் பட்டினத்தை கைப்பற்றும் வரை, அது ஒரு குக்கிராமமாக இல்லை, ஒருவேளை 13ம் நூற்றாண்டின் இறுதிவரை அது கிராமமாக இருந்திருக்கலாம்.

கிறிஸ்தவர்கள், தோமா கொல்லப்பட்ட இடத்தின் மண்ணை எடுத்து வந்து, ‘குவாட்டன்’ அல்லது ‘டெர்டியன்’ காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுப்பார்கள் என்று மார்கோ போலோ குறிப்பிடுகிறார். போலோவின் குறிப்பில் தாமஸ் மரணமடைந்த விதம் பற்றி தெளிவு இல்லை. கடவுள் மற்றும் செயின்ட் தாமஸ் ஆகியோரின் சக்தியால் நோய்வாய்ப்பட்டவர்கள் குணப்படுத்தப் பட்டார்கள் என்று குறிப்பிடுகிறார். அங்கு, சோளம் மற்றும் அரிசியைத் தவிர வேறு எந்த உணவும் இல்லை என்றும் அவர்கள் பனை மரத்திலிருந்து தயாரிக்கும் மதுவை மூலபானமாக அருந்துகின்றனர் என்றும் மார்கோபோலோ தெரிவிக்கிறார்.

‘‘செங்கடல், பாரசீக வளைகுடா, வங்காள விரிகுடா மற்றும் சீனா போன்ற பகுதிகளில் பெரிய வணிக நடவடிக்கைக்கான சான்றுகளை நாங்கள் கண்டறிந் துள்ளோம். ஆனால், துணிச்சலான கடற்படையினர் யாரும் நன்நம்பிக்கை-முனை திரும்பி அட்லாண்டிக் பெருங்கடலில் தோன்றவில்லை என்று மார்கோ போலோ கூறுகிறார். ‘மக்கள் சிலை வழிபாட்டாளர்கள். கிறிஸ்தவர்கள் மற்றும் சிலர் யூதர்கள். கிறிஸ்தவர்களின் வழிபாட்டு மொழியாக சிரியாக் இருந்தது’ -போன்றவை தவிர மக்களின் மத-நம்பிக்கை பற்றி வேறெதுவும் கூறவில்லை.

மக்கள் தங்களுக்கென ஒரு மொழியையும், ஒரு அரசனையும் கொண்டுள்ளனர் என்று போலோ கூறுகிறார். குயிலான் (Quilon) ஒரு சுதந்திர ராஜ்ஜியம் என்று அவர் கூறியது சரிதான். ‘குயிலான்’ குட்டி சமஸ்தானங்களில் ஒன்றாக இருந்து, பின்னர் திருவிதாங்கூர் இராச்சியத்தில் சேர்க்கப்பட்டது வரலாறு. அரேபிய பயணி ‘இபின் பதூதா’வும் இதே தகவலை பதிவு செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் ஜெபக்குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் பொருளாதாரம் மேம்பட... பெருந்தொற்று, புயல்-மழை, பூமி-அதிர்ச்சி போன்ற பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட....

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம், பிரிவினைவாதம் வேரறுக்கப்பட... ஒன்றிய அரசு எல்லா மாநிலங்களுக்கு சேரவேண்டிய நிலுவைத் தொகையை பாரபட்சமின்றி வழங்க... விலைவாசிகள் குறைய... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன -மத - மொழி வேறுபாடின்றி வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... மத-பிரிவினைவாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட....

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி.ஃப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யூ, ஷெர்லி ஜூடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ்டினா, ஜோ.ஃப்னா, ஜெனிபர், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு ஞானம் வழங்கப்பட...

6) திரு. பால் நந்தகோபால், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ரூபவதி நோபிள், திருமதி. புஷ்பா, திரு. அப்பன் டேவிட், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. எஸ்தர், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. வசந்தா அன்பன், திரு.டி. மனோகர், திருமதி. சுகிர்தா சின்னதுரை, திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. ரூபி ஜாண்சன், திருமதி. மெர்சி தனராஜ், திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ஜெஸி ஜெயக்குமார் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. ஹேமா காபிரியேல், திரு. ஜெயகர் ஞான மணி, திருமதி. மியூரியல் புஷ்பராஜ், திருமதி. தெல்மா ஸ்டேன்லி, திருமதி. இசபெல்லா எஸ்தர், திருமதி. ஜெயக்குமாரி, திருமதி. ரூபி போஸ்கோ, திரு. நிக்ஸன் எவர்பிரைட், திருமதி. சுவர்ணலதா அற்புதராஜ், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ் ஆகியோருக்காக அவர்களது குடும்பங்களுக்காக...

6) அருட்திருமதி. எஸ்தர் கிங்ஸ்லி, திருமதி. ஹனா டைடஸ், திருமதி. பிரீத்தி சைமன் ஆகியோரது சுக பிரசவத்துக்காக...

# ஜெப-ஜன்னல் நன்றி பலிகள்

**கர்த்தருக்கு நன்றி பலிகளைச் செலுத்துவோம் - Come! Let us thank God**

1) திரு. பால் நந்தகோபால் அவர்களது இருதய அறுவை சிகிச்சையில் வெற்றி தந்து அவருக்கு நற்சுகம் அருளிய தேவாதி தேவனுக்கு நன்றிபலிகளைச் செலுத்துவோம்...

2) திருமதி. தனுஸ்ரீ அவர்களை பிரசவத்தில் பாதுகாத்து, அருமையான ஆண் குழந்தையைக் கொடுத்த கர்த்தாதி கர்த்தருக்கு நன்றிபலிகளைச் செலுத்துவோம்...

# வேதாகம போட்டி-149 (எரேமியா)

## சரியான விடைகள்

1. அனனியா எரேமியா:-28:10
2. பரி.ஸ்தானம் எரேமியா:-17:12
3. யூதாவின் பாவம் எரேமியா:-17:1
4. கச்சையை எரேமியா:-13:4
5. யூதா எரேமியா:-2:28
6. இஸ்ரவேல் வம்சத்தார் எரேமியா:-9:26
7. இருதயம் எரேமியா:-8:18
8. பூமி, வானங்கள் எரேமியா:-4:23
9. தவறு எரேமியா:-31:30
10. சரி எரேமியா:-51:7
11. தவறு எரேமியா:-14:4
12. சரி எரேமியா:-12:13
13. ஈ - பாபிலோன் ராஜா எரேமியா:-16:7
14. ஆ - காட்டுக்கழுதைகள் எரே:-16:7
15. இ - இருதயம் எரேமியா:-17:9
16. ஆ - திராட்சை எரேமியா:-31:30
17. கோராவாரிக் காற்று எரேமியா:-30:23
18. பாபிலோன் எரேமியா:-51:37
19. யோனத்தான் எரேமியா:-37:15,16
20. சங்கார பள்ளத்தாக்கு எரே:-7:31,32

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL**: 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL**: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO**: 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463

## கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் (ஈஸ்டர்) நல்வாழ்த்துக்ள்

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், நல்ல-விதைகள்-கைபிரதி களப்பணியாளர்கள், அச்சகத்தார், தபால்-துறை அன்பர்கள், அனைத்துத் திருச்சபை விசுவாசக் குடும்பத்தார் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த ஈஸ்டர்-2023 நல்வாழ்த்துக்கள்.
கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்



Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th April 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. காரைக்கால்-காங்கேசன்துறை இடையிலான இந்திய-இலங்கை பயணிகள்-கப்பல் போக்குவரத்து இம்மாதம் 29-ம் தேதி தொடங்குகிறது. இதன் பயண நேரம் 4மணி நேரம் ஆகும். இலங்கை போக்குவரத்து துறை தகவல்.

2. எல்விஎம்.3-எம்.3 ராக்கெட் 36செயற்கைகோள்களை விண்ணில் செலுத்தியதைத் தொடர்ந்து, விண்ணுக்கு மனிதனை அனுப்பும் திட்டத்திற்கும் எல்விஎம்.3-எம்.3 தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என இஸ்ரோ தகவல்.

3. தமிழ்நாட்டில் பிளஸ்-1, பிளஸ்-2 பொதுத்தேர்வுகள் முடி வடைந்த நிலையில் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு வரும் ஏப்ரல் 6-ம் தேதி முதல் 20-ம் தேதி வரை நடை பெறுகிறது. முடிவுகள் மே 17-ம் தேதி வெளியாகின்றன.

4. இந்தியாவின் ‘இண்டர்நேஷனல் டிராக்டர்ஸ்’ துணை நிறுவனமான ‘சோலிஸ் டிராக்டர்ஸ்,’ ஜெர்மனியின் ‘தாலர் ஜிஎம்பிஎச்’ நிறுவனத்தை ரூ.200 கோடிக்கு வாங்கி, 120-நாடுகளுக்கு விரிவாக்கியுள்ளது.

5. உலக ஹாக்கி தரவரிசையில் இந்தியா 4-ம் இடம் பெற்றுள்ளது. புரோ-ஹாக்கி-லீக் போட்டியின் முடிவில் ஹாலந்து, பெல்ஜியம், ஜெர்மனி, ஆஸ்திரேலியா நாடுகள் முறையே 1, 2, 3 மற்றும் 5ம் இடத்தைப் பெற்றுள்ளன.

Posted on: 10th April 2023

To

If undelivered Please return to:
REV.S.J.D. DHARMARAJA
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI-93 TAMIL NADU SOUTH INDIA

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.